**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 92 /2019 வா.சா.2**

2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: சக்திவேல் | தந்தை பெயர்: கருப்பையா |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

<u>07.04.2026</u>

<u>1,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி</u>

1. எனக்கு காரைக்குடியில் வீடு உள்ளது . போஸ்ட்மாஸ்டாராக நான் 40 வருடங்களாக வேலை பார்த்தேன். நான் 2011 ம் வருடம் பணிஓய்வு பெற்றேன் . வாதி எனது சகலை ஆவார் . எனது நிரூபணவாக்குமூலத்தில் வாதி எனது சகலை என்று சொல்லவில்லை என்றால் சரிதான் . இவ்வழக்கின் விவரம் எனக்கு தெரியும் . வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே நடந்து வரும் மற்ற வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியாது.

2. காளம்பூரில் 2011 ம் வருடம் வீடு கட்டி 2012 ஆம் வருடம் முதல் வசித்து வருகிறேன். தாவாச்சொத்தின் சர்வே எண் 276/15, 278/2 ஆகும். வாதி சர்வே எண் 278/2 க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் எனக்கு வழக்கு விவரங்கள் முழுமையாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல . 1984 ல் UDR, சர்வே ஏற்பட்டது என்றால் சரிதான். 1984 ல் சேக்கு மற்றும் அவரது மகன் கனகாசபாபதி மோசடியாக பழனியம்மாள் பெயரில் பட்டா மாறுதல் செய்த விவரங்கள் நான் அந்த குடும்பத்தில் இருந்ததால் தெரியும்.

3. நான் மத்திய அரசில் பணிபுரிந்து வந்ததால் மேற்படி விவரங்கள் நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல . நான் ஆடிப்பொங்கல் மற்றும் தைபொங்களுக்கு ஊருக்கு வருவேன் . பழனியம்மாள் பெயரில் தனி பட்டா தாவாச்சொத்திற்கு இருந்த விவரம் எனக்கு தெரியாது . நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் உள்ள 5 வது பத்தியில் சொல்லியுள்ள பாகப்பிரிவினையானது 1983 ல் நடைபெற்றிருக்கலாம் . நான் மேற்படி பாகப்பிரிவினைப்பத்திரத்தில்

கையொப்பம் எதுவும் செய்யவில்லை . EB மாற்றியது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட லெட்சுமணன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. EB service என்பது அரசு இலவச மின்சாரமாகும். RTO அலுவலகத்தில் என்ன நடைபெற்றது என்று எனக்கு தெரியாது . EB service 3ம் பிரதிவாதி பெயரில் மாற்றம்செய்யப்பட்ட பின்பு தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வெள்ளைச்சாமி குடும்பத்தில் பாகம் பிரித்த விவரம் எனக்கு தெரியும். சேக்கு அப்பா சேதுராமன், வெள்ளைச்சாமி குடும்பத்தில் நடந்த பாகத்தில் பாகங்களை பிரித்து கொடுத்தார்.

5. 2ம் வாதி பழனியம்மாள் வேறு சொத்துக்களை வேறு சில நபர்களுக்கு விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியாது. வாதி பழனிச்சாமியும் , அவரது அண்ணன் மனைவி புஷ்பம் சொத்துக்களை 3ம் நபர்களுக்கு கிரையம் செய்த விவரம் எனக்கு தெரியும். வாதி எனது உறவினர் என்பதால் முழு விவரங்கள் தெரிந்து கொள்ளாமல் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**4,6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

6. தாவாச் சொத்தின் மின்இணைப்பு எண் 144 ஆகும். மேற்படி மின் இணைப்பு பழனியம்மாள் பெயரில் தற்போது உள்ளது . அதன் சர்வே எண் 276/15 ஆகும். மின் இணைப்பு கோரி யார் மனு தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதிகள் அனைவரும் கேட்டுகொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் . வாதிகள் எனது உறவினர்கள்.

7. மின் இணைப்பு எண் 144 யார் கோரியது, யார் பெயரில் உள்ளது , எப்போது வழங்கப்பட்டது போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது . வாதிகள் எனது உறவினர் என்பதால் அவர்கள் கேட்டுகொண்டதின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக எனக்கு விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல.